1967 ஜூன் 29]

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, "7—7—1967–ஆம் நாளன்று எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய மானியக் கோரிக்கைகள் எண் XVI—வேளாண்மை, எண் XVII மீன்வளம், எண XVIII—விலங்கின வளர்ப்பு, எண் XXXIX—வேளாண்மை மூலதனச் செலவு, எண் XXXV—காட்டு வளத் துறை, எண் XXI—சின்கோனா, எண் XLIV—காட்டுவள மூலதனச் செலவு 14—7—1967–ஆம் நாளன்றும், 14—7—1967-ஆம் நாளான்று எடுத்துக் கொள்ளப்படவேண்டிய மானியக் கோரிக்கை எண் XXV—ஆதிவாசிகள், அரிசனங்கள், ஏனைய பின்தங்கிய வகுப்பினர் நலன் 7—7—1967–ஆம் நாளன்றும் மாற்றி எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் " என்று நான் கோருகிறேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று விவாதத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டிய நிதிக் கோரிக்கைகளைப் பொறுத்த வரையில், 12·30 வரையில் நீதி நிர்வாகம், சிறைச்சாலைகள், பத்திரப் பதிவுத் துறை ஆகிய மூன்று கோரிக்கைகளையும்,பிறகு "கூட்டுறவு" கோரிக்கையையும் எடுத்துக் கொள்ளலாம். இதைக் குறித்த ஒரு தீர்மானத்தை மாண்பு மிகு அவை முன்னவர் அவர்கள் கொண்டுவருவார்கள்.

(இ) பேரவை அலுவல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய நிகழ்ச்சி நிரலில் கண்டுள்ள மானியக் கோரிக்கை கள் எண் X–நீதி நிர்வாகம், எண் XI–சிறைச்சாலைகள், எண் V–பத்திரப் பதிவுத் துறை ஆகியவைகளை ஒன்றாக விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்றும், இவ் விவாதத்திற்கு 12·30 மணி வரை காலம் ஒதுக்க வேண்டும் என்றும், சட்டப் பேரவை விதி 21, உட்பிரிவு 3–இன் கீழ் நான் கோருகின்றேன்.

தீர்மானம், பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டது.

4. 1967–68-ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது வாக்கெடுப்பு (தொடர்ச்சி.)

(அ) கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் அவர்கள் " நீதி நிர்வாகம்" பற்றிய நிதிக் கோரிக்கையைக் கொண்டுவரு வார்கள்.

மாண்புமிகு திரு. செ. மாதவன்: தலைவர் அவர்களே, கவர்னர் அவர்களின் பரிவுரையின்மேல் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன் மொழிகிறேன்:

"கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 1,98,31,800-க்கு மேற்படாத தொகையை அரசுக்கு வழங்க வேண்டும்."

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதையொட்டிய வெட்டுத் தீர்மானங் களை அந்தந்த உறுப்பினர்கள் இப்பொழுது முன்மொழிவார்கள். வழிமொழியத் தேவை இல்லை.

திரு. க. ர. நல்லசிவம்: "கொள்கை பற்றி விவாதிக்க" என் பெயரில் உள்ள கீழ்க்கண்ட வெட்டுத்தீர்மானத்தை நான் முன்மொழிகிறேன்:

" கோரிக்கை எண் X—நீதி நிர்வாகம்—என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்படுகின்ற ரூ. 1,98,31,800—இல் ரூ. 100 குறைக்க வேண்டும்."